நாள். 11.11.2024

எம்.சி.ஓ.பி எண். 56/2019

ம.சா. 2

பெயர்.கரண் சங்கர்

த/பெ.திரு. உமா சங்கர்

வயது. 26

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 47 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.

**2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸார் என்னை விசாரிக்கவில்லை. நான் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி எதுவும் அளிக்கவில்லை. நான் விபத்து நடக்கும்போது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். நான் கல்பாக்கத்திலிருந்து மகாபலிபுரம் சென்று கொண்டிருந்தேன். எனக்கு எதிர் திசையில் கார் மற்றும் பேருந்து வந்துகொண்டிருந்தது. நான் விபத்தே பார்க்கவே இல்லை என்றும் நான் விபத்தை நேரடியாக பார்க்காமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தே கார் ஓட்டுநர் மீது அஜாக்கிரதை என்பதால் தான் முதல் தகவல் அறிக்கை கார் ஓட்டுநர் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாமல் பொய்யாக இந்த விபத்தை நேரடியாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

TAMILSELVI S

Digitally signed by TAMILSELVI S